DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.125/2025

PW - 6

| | | |
|---|---|---|
| Name | : | வில்பர் ரைட் (Lw - 7 ) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(**எதிரி ஆஜர்**)**

முதல் விசாரணை **Date : 07.05.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், மோகனூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

நான் கடந்த 18.10.2024ம் தேதி மாலை 18.30 மணிக்கு சேந்தமங்கலம் காவல் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்த போது முன்னதாக 08.10.2024ம் தேதி சுகன்யா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் பேரில் மனு ரசீது எண். 398/2024 ன் கீழான மனு ரசீதின் பேரில் நிலைய குற்ற எண் 230/2024 BNS சட்டப்பிரிவுகள் 329(4), 78(2) உ/இ 4 of TNPHW ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வாதியின் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். மற்றொரு நகலை புலன் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வார் திருமதி. கே.எஸ். பிரியா அவர்களின் பார்வைக்கு வைத்தேன். **(**முதல் தகவல் அறிக்கை அ**.**சா**.**ஆ**.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது**)** இது சம்பந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி **தரப்பு குறுக்கு விசாரணை-**

இவ்வழக்கில் நான் தான் புகாரினை பெற்று மனு ரசீது கொடுத்தேன் என்றாலும்,

பின்னிட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றாலும் சரிதான். மனு ரசீது கொடுக்கப்பட்டு 10 நாட்கள் கழித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் இடைப்பட்ட காலத்தில் யாருக்கும் BNSS பிரிவு 35 ன் கீழ் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் எதிரிக்கு 18.10.2024ம் தேதி அறிவிப்பு கொடுத்தேன். மனு ரசீது வழங்கப்பட்டதற்கு பின்னிட்டு வழக்கின் உண்மை தன்மையை அறிய யாரையும் விசாரித்தேனா என்றால் 08.10.2024ம் தேதி BNSS பிரிவு 94 ன் கீழ் வாதி மற்றும் எதிரிக்கு அறிவிப்பு அனுப்பி விசாரித்தேன். மேற்படி அறிவிப்பின் பேரில் வாதி மற்றும் எதிரி நிலையம் ஆஜராகி ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான்.

புகாரில் சம்பவம் நடந்த தேதி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகாரில் சம்பவம் குறித்து குறிப்பிட்டு எதுவும் கூறப்படவில்லை என்றால் சரிதான். நான் வாதிக்கு அறிவிப்பு அனுப்பிய பின்னிட்டும் வாதி நிலையத்தில் ஆஜராகி சம்பவம் குறித்தோ தேதி குறித்தோ எதுவும் கூறவில்லை என்றால் சரியல்ல. வாதி புகார் கொடுப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு சம்பவம் நடந்ததாக சொன்னார். சம்பவம் நடந்து புகார் கொடுப்பதற்கு ஏற்பட்ட ஒரு வார காலதாமத்திற்கான காரணம் குறித்து வாதியிடம் விசாரணை செய்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். சம்பவம் எந்த தேதியில் எத்தனை மணிக்கு நடந்தது என வாதியிடம் விசாரணை செய்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் அதுபற்றி எனக்கு நினைவில்லை.

நான் புகாரின் உண்மை தன்னை தெரிந்து கொள்ளாமல் பொதுவான குற்றச்சாட்டின் கீழ் முறையான விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. வாதி ஆங்கிலத்தில் புகார் கொடுத்துள்ள நிலையில் அவருக்கு தமிழ் தெரியுமா என்று நான் தெரிந்து கொண்டேனா என்றால் தமிழ் தெரியும் என்று கூறினார். வாதியுடன் புகார் கொடுக்க யார் யார் வந்தார்கள் என்றால் வாதியின் சகோதரர் வந்தார்.

**மறுவிசாரணை:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**